# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்
## தயாரிப்பு மற்றும் பணிகள்

STATISTICS DEPARTMENT
CENTRAL BANK OF SRI LANKA

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள், 2024 மாச்சில் தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளில் விரிவடைதலை எடுத்துக்காட்டுகின்றன**


**தயாரித்தலுக்கான இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – தயாரிப்பு), 2024 மாச்சில் 62.5 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து, தயாரித்தல் நடவடிக்கைகளில் விரிவடைதலினை எடுத்துக்காட்டியது.** மூன்று ஆண்டுகளில் பதிவாகியிருந்த அதிகூடிய தயாரித்தல் கொ.மு.சுட்டெண்ணை இது குறிக்கின்றது. கேள்வியினால் பிரதானமாகத் தூண்டப்பட்டு, அனைத்து துணைச் சுட்டெண்களும் மாதத்திற்கு மாதம் அடிப்படையில் விரிவடைந்தமை இவ்வதிகரிப்பிற்கு பருவகால பங்களித்தன.

**தயாரிப்பு கொ.மு.சு 62.5**

**2024 மாச்சு**

புதிய கட்டளைகளிலும் உற்பத்தியிலும் அதிகரிப்பிற்கு உணவு மற்றும் குடிபானங்கள் அத்துடன் புடவைகள் மற்றும் அணியும் ஆடை துறையின் தயாரித்தல் பிரதான காரணமாக அமைந்திருந்தது. வரவிருக்கும் பண்டிகைப் பருவகாலம் பற்றி அநேகமான தயாரிப்பாளர்கள், விசேடமாக உணவு மற்றும் குடிபானத் துறையைச் சார்ந்தவர்கள் சாதகமான எண்ணப்பாங்கினைக் கொண்டிருந்தனர். மேலும், புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி என்பவற்றிற்கிசைவாக தொழில்நிலையும் கொள்வனவுகளின் இருப்பும் மாதகாலப்பகுதியில் அதிகரித்தன. மேலும், விலை மட்டங்களில் வீழ்ச்சியும் அவதானிக்கப்பட்டது. அதேவேளை, நிரம்பலர்களின் விநியோக நேரம் மாச்சில் மெதுவான வீதத்திலாயினும் நீட்சியடைந்து காணப்பட்டது.

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

*கொமுசு தொகுப்பு - தயாரிப்பு அளவீடு*

| மாறி | பெப் | மாச் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **மாறி** | பெப். | மாச். | +/- | சுருக்கம் |
| **கொ.மு.சு – தயாரித்தல்** | **56.0** | **62.5** | **+** | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| புதிய கட்டளைகள் | 57.0 | 66.5 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| உற்பத்தி | 55.0 | 67.2 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 54.0 | 54.5 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 56.0 | 65.5 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 58.6 | 55.6 | - | நீட்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

### உலகளாவிய தோற்றப்பாடு:

கொமுசு தயாரிப்புத் தொகுப்பு

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | மேம்பட்டுள்ளது, உயர்வான வீதத்தில் |
| இந்தியா | மேம்பட்டுள்ளது, உயர்வான வீதத்தில் |
| சீனா | மேம்பட்டுள்ளது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | மேம்பட்டுள்ளது, மெதுவான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | சீர்குலைவிலிருந்து மேம்பட்டுள்ளது. |
| யூரோ வலயம் | சீர்குலைந்துள்ளது, உயர்வான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2024 ஏப்பிறல் 15 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[1]எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொமு சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

அடுத்த மூன்று மாதங்களுக்கான தொழில்துறை எதிர்பார்க்கைகள் சாதகமாகக் காணப்படுகின்றன. எனினும், பருவகால உச்சத்தின் இறுதியின் பின்னர் ஏப்பிறல் காலப்பகுதியில் உற்பத்தியில் இயற்கையான வீழ்ச்சியினை அவற்றின் அநேகமானவை எதிர்பார்க்கின்றன.

**பணிகளுக்கான இலங்கை கொ.மு.சுட்டெண் (கொ.மு.சு – பணிகள்), 67.7 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்த வியாபார நடவடிக்கைச் சுட்டெண் மூலம் பிரதிபலிக்கப்பட்டவாறு 2024 மாச்சில் பணிகள் நடவடிக்கைகளில் மேலும் விரிவடைதலை எடுத்துக்காட்டியது.**

அநேகமான துறைகளுக்கிடையில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகள் மூலம் தொழில் நடவடிக்கைகளில் தொடர்ச்சியான விரிவடைதல் தூண்டப்பட்டிருந்தது. அதற்கமைய, மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத் துறை பண்டிகைப் பருவகாலத்தை நோக்கி அதிகரித்த விற்பனைகளுக்குக் காரணமாகவிருந்து கணிசமான உயர்வடைதலை எதிர்கொண்டது. மேலும், தளர்வான நாணயக் கொள்கை நிலை மூலம் துணையளிக்கப்பட்டு நிதியியல் பணிகள் துணைத் துறையின் வியாபார நடவடிக்கைகள் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்தன. அதேவேளை, உயர்வான சுற்றுலாப் பயணிகள் வருகைகள் மூலம் தங்குமிடம், உணவு மற்றும் குடிபானம் துணைத் துறை தூண்டப்பட்டு, தொடர்ந்தும் வளர்ச்சியடைந்த அதேவேளை போக்குவரத்து, ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகள், தொழில்சார் பணிகள் துணைத் துறைகளும் மாதகாலப்பகுதியில் சாதகமான அபிவிருத்திகளைப் பதிவுசெய்தன.

மாச்சில் குறிப்பாக மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், நிதியியல் பணிகள், காப்புறுதி, போக்குவரத்து மற்றும் தொழில்சார் பணிகள் துறைகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்களுடன் புதிய வியாபாரங்கள் அதிகரித்தன.

பண்டிகைப் பருவகாலத்தை நோக்காகக் கொண்டு பல கம்பனிகளால் மேற்கொள்ளப்பட்ட புதிய ஆட்சேர்ப்புக்கள் காரணமாக தொழில்நிலை அதிகரித்தது. அதேவேளை, மாச்சு காலப்பகுதியில் நிலுவையிலுள்ள பணிகள் மெதுவான வீதத்திலாயினும் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தன.

***கொமுசு தொகுப்பு - பணிகள் அளவீடு***


| மாறி | பெப் | மாச். | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொமுசு – பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)** | **53.0** | **67.7** | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| புதிய வியாபாரங்கள் | 54.5 | 64.0 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 51.0 | 52.7 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 44.6 | 48.3 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 71.2 | 74.2 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தொழில் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கை சாதகமான பேரண்டப் பொருளாதார நிலைமைகள் மூலம் துணையளிக்கப்பட்டு தொடர்ந்தும் அதிகரித்தன.

**பணிகள்**
**கொ.மு.சு 67.7**
2024 மாச்சு

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உலகளாவிய தோற்றப்பாடு:**
**கொமுசு பணிகளின் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | மேம்பட்டுள்ளது, உயர்வான வீதத்தில் |
| இந்தியா | மேம்பட்டுள்ளது, உயர்வான வீதத்தில் |
| சீனா | மேம்பட்டுள்ளது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | மேம்பட்டுள்ளது, மெதுவான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | மேம்பட்டுள்ளது, மெதுவான வீதத்தில் |
| யூரோ வலயம் | மேம்பட்டுள்ளது, உயர்வான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[i], 2024 ஏப்பிறல் 15 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**முறையியல்**

வினாக்கொத்துக்கள் தொடர்ந்துவருகின்ற மாதத்தின் முதலரையில் நிறைவுசெய்யப்படுகின்றன. ஒவ்வொரு மாறிலிக்காகவும் முன்னைய மாதத்துடன் ஒப்பிட்டு அதிகரிப்பை, வீழ்ச்சியை அல்லது மாற்றமின்மையை அறிக்கையிடுமாறும் ஏதேனும் மாற்றங்களுக்கான காரணங்களை வழங்குமாறும் பதிலிறுப்பாளர்கள் கேட்கப்படுகின்றனர். சுட்டெண் தொகுப்பும் சுட்டிகள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி. குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

**கொமுசு – தயாரித்தல்,** தயாரித்தலுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகக் கருதப்படுகின்ற இது புதிய கட்டளைகள், வெளியீடு, தொழில்நிலை, நிரம்பலர் விநியோக நேரம் மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பவற்றின் நிறையேற்றப்பட்ட சராசரியொன்றாகும்.
பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பது, பன்னாட்டு ரீதியான சிறந்த நடத்தைகளுக்கமைவாக பணிகளுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். இது, **கொமுசு – பணிகள்** எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது. பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண்ணுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.